**மினுவாங்கொடை நகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 யூலை 06 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 18 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, மினுவாங்கொடை நகர சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியின் நிலையான வைப்பு ஒன்றில் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 1,937,408 ஆகும் என வங்கியில் உறுதிசெய்யப்பட்டபோதும், கணக்குகளில் ரூபா 1,895,042 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பிழையற்ற மீதியைக் கணக்கிலிட வேண்டும். | நாட்குறிப்பின் மூலம் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன். |
| (ஆ) | நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 1,056,436 பெறுமதியான 10 சிறுவர் புத்தக ராக்கைகள் கணக்கிலிடப்படவில்லை. | களஞ்சியத்தில் பெறப்படு பவற்றைச் சரிவரக் கணக்கிலிட வேண்டும். | நாட்குறிப்பின் மூலம் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |
| (இ) | முன்னைய ஆண்டின் கையிருப்புக் கணக்கிலும் களஞ்சியக் கடன் கொடுத்தோராகவும் கணக்கிலிடப்பட்ட ரூபா 49,675 பெறுமதியான 06 கையிருப்பு விடயங்கள் மீளாய்வாண்டிலும் | பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். | நாட்குறிப்பின் மூலம் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

கையிருப்பு பெறுவனவாகவும் கடன் கொடுத்தோர் ஆகவும் கணக்கிலிடப்பட்டிருந்தன.

**1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட 06 கணக்கீட்டு விடயங்களது மீதிகள் மற்றும் உப பதிவேட்டு மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 531,714 வித்தியாசம் நிலவியது. | குறித்த மீதிகளது வேறுபாடுகளை கணக்கிணக்கம் செய்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம்மீதிகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

**1.3.3 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஏப்ரல் தொடக்கம் 2019 டிசம்பர் வரை சேகரிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை ரூபா 28,245 ஆகும். இது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படவில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்சமயம் 2019 டிசம்பர் வரையிலான கொடுப்பனவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

**1.3.4 கணக்காய்வுக்குத் தேவையான ஆவணச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கையிருப்புக் கணக்கு மீதி ரூபா 590,092 ஆகும். இதனுடன் தொடர்புடைய 06 வழங்கற் கட்டளைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கீட்டு மீதிகளை உறுதிப்படுத்தும் தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும். | வழங்கற் கட்டளை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அறிவிக்கின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 30,511,099 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 18,370,593 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை என்பன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் | 2018 மதிப்பிடப்பட்ட வருவாய் | 2018 பட்டியலிடப்பட்ட வருவாய் | 2018 சேகரிக்கப்பட்ட வருவாய் | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருவாய் | 2017 பட்டியலிடப்பட்ட வருவாய் | 2017 சேகரிக்கப்பட்ட வருவாய் | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 11,279 | 11,704 | 8,380 | 5,895 | 10,287 | 11,659 | 10,550 | 7,058 |
| (ii) | வாடகை | 21,993 | 22,366 | 22,061 | 930 | 20,398 | 21,356 | 20,006 | 1,297 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 800 | 526 | 526 | - | 620 | 491 | 491 | 1,297 |
| (iv) | ஏனைய வருமானம் | 119,025 | 84,058 | 119,277 | - | 29,281 | 16,101 | 16,101 | - |
| | | 153,097 | 118,654 | 150,244 | 6,825 | 60,586 | 499,607 | 48,148 | 8,355 |

### 2.2.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய வாரச்சந்தை வாகனத் தரிப்பிடத்தை 2019 ஆம் ஆண்டின் பொருட்டு குத்தகைக்கு வழங்கும்போது உடன்படிக்கை நிபந்தனையினது 03 ஆம் இலக்கத்தின் பிரகாரம் மும்மாத உடன்படிக்கைப் பிணை மற்றும் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட வரித்தொகை என்பவற்றுடன் ரூபா 126,243 சபைக்குச் செலுத்தப்பட்டு உடன்படிக்கையில் ஈடுபட முடியுமாயினும், ரூபா 54,310 குறைவாகப் பெறப்பட்டு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. மேலும், கேள்விப் பத்திரத்தின் எஞ்சிய 09 மாதங்களுக்கு சமமான காப்புறுதி ஈடுசெய்யப்பட்டோ அல்லது சொத்து ஈடாகப் பெறப்பட்டோ இருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் பிரகாரம் பிணைத் தொகையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறனவை ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | நிவ்ஹேம் வீதியின் ஆரம்ப இடத்திலிருந்து உள்ள காணியை மதிப்பீடு செய்வதற்கும் | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் | வருவாய்ப் பரிசோதகரால் தீர்மானிக்கப்பட்ட அதி குறைந்த கூறு |

| | | |
|---|---|---|
| அதிகுறைந்த கூறு விலையைத் தீர்மானிப்பதற்கும் முயற்சிக்காது மாதாந்தம் ரூபா 15,000 வீதப்படி 2019 மே தொடக்கம் டிசம்பர் வரை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், குத்தகையாளரால் 10 கடைகள் நிர்மாணிக்கப்பட்டுமிருந்தன. அக்கடைகளுள் சிலவற்றைக் குத்தகைக்குப் பெற்றிருந்தவர்கள் அவற்றை உப குத்தகைக்கு வழங்கியிருந்தனர். | மூலம் வெளி நபர்கள் முறையற்றவாறு பணம் சம்பாதிப்பதற்கு இடமளிக்க கூடாது. | விலையான நாளாந்தம் ரூபா 400 எனும் தொகையை அடிப்படையாகக் கொண்டு கூடிய கூறு விலையான ரூபா 15,000.00 (நாளொன்றுக்கு ரூபா 500) ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையாகத் தீர்மானிக்கப்பட்டது என அறிவிக்கின்றேன். |

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையால் வழங்கப்பட்ட விற்பனைக்கான அனுமதிப்பத்திரமின்றி மினுவாங்கொட பிரதேசத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பெரியளவிலான குடிநீர் விற்பனைக்கு நீரைப் பெறுவதற்கு நீர்க்குழாய்களை அழுத்தித் தோண்டியமையால் பிரதேசத்தில் குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக பிரதேசவாசிகள் நகர சபைக்குப் புகார் செய்திருந்தனர். அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | சுற்றாடலுக்கு பாதகமான தொழில் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அறிவிப்பதற்கு சபைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காணப்படுகின்றன.

**(அ) வருடாந்த செயலாற்றல் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றல் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்தாத வியாபாரம் | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள | அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் பதிவேட்டின் மொத்தத் தொகையும் |

| | | |
|---|---|---|
| தொடர்பாக வழக்கு தொடரல், 2018 ஆம் ஆண்டு வரை நிலுவை மீதிகளுடன் தீர்வை செலுத்த வேண்டியவர்களுக்கு சொத்துத் தடை, மீள் சுழற்சி செய்யப்படக் கூடிய கழிவுப் பொருள் விற்பனைச் சந்தையை 04 மாதங்களுக்கு ஒரு முறை நடாத்துதல், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தவிர்ப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், மினுவாங்கொட பொலிஸாருடன் இணைந்து மகளிருக்கான சட்டபூர்வ பாதுகாப்பு தொடர்பாக அறிவூட்டுதல் எனும் பணிகள் நடைபெறவில்லை. | நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். | அறவிடப்பட்டுள்ளது. நடமாடும் சேவையின் மூலம் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் செய்வது கட்டாயம் ஆனதல்ல. ஆகவே, அதற்குப் பதிலாக வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ள தெனவும் அறிவிக்கின்றேன். |

**(ஆ) குப்பை முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| குப்பை முகாமைத்துவத்தை முறைசார் விதமாக திட்டமிடுவதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குப்பை முகாமைத்துவக் கொள்கைகளை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பாக சபை கவனம் செலுத்த வேண்டும். | 2020 மே முதல் உக்காத குப்பைகளை திவுலபிடிய பிரதேச சபையின் நாவான சேதனப் பசளை செயற்களத்திற்கு அனுப்புவதற்காக திட்டமிடப்பட்டுள்ளமையால் இந்த சிக்கல் நிலைமை குறைவடையும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 01 றூட் 6.25 பர்ச்சர்ஸ் பழைய மயானத்தில் உள்ள காணி ஒரு பெண்மணியால் பயன்படுத்தப்படுவதுடன், 2011 ஆம் அண்டில் அதற்கு பிரகடன உரித்துறுதியும் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த உரித்துறுதியில் குறிப்பிடப்பட்ட காணியின் அளவு 24.59 பர்ச்சர்ஸ் ஆகும். எஞ்சிய 21.66 பர்ச்சர்ஸ் சபைக்கு உள்ளவாறு சொந்தமானதென்று உறுதி செய்யப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களது உரித்தும் அவை உள்ளதை உறுதி செய்தலும் நடைபெற வேண்டும். | தற்போதுள்ள சபையானது அத்துமீறிய குடியேற்றவாசிகளை அகற்றுவதற்கு சபையின் அங்கீகாரத்தைப் பெற்று உள்ளூராட்சித் திணைக்களம், உள்ளூராட்சி அமைச்சு, ஆளுநர் அலுவலகம் என்பவற்றிற்கு அதனை அனுப்பி உள்ளது என்பதை அறிவிக்கின்றேன். |
| (ஆ) | சபையிடமிருந்து பின்னர் இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பராக்கிரம விளையாட்டுத் | சபைக்குச் சொந்தமான சொத்துக்களது உரித்தும் அவை | தொடர்புடைய உரித்துறுதியை நொத்தாரிசு தயாரிக்கும் போது ஏற்பட்ட |

| | | |
|---|---|---|
| திடலுக்கு அடுத்துள்ள காணியை மீண்டும் சபை சுவீகரித்தபோது 01 றூட், 8.15 பர்ச்சர்ஸ் புலுகஹயாவத்தை காணியில் சனசமூக நிலையத்துடன் 11.45 பர்ச்சஸை அகற்றி 36.7 பர்ச்சர்ஸ் மின்சார சபைக்கு வழங்குவதற்கு விருப்பு உள்ளதென குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, கைவிடும் உரித்துறுதியின் மூலம் பராக்கிரம விளையாட்டுத் திடல் காணியை மின்சார சபை கைவிட்டிருந்தது. அதற்கமைய, நகரசபையும் கைவிடல் உரித்துறுதியின் மூலம் 01 றூட், 8.15 பர்ச்சர்ஸ் புலுகஹயாய காணியின் மொத்த இடத்தையும் கைவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. 36.7 பர்ச்சர்ஸ் ஒப்படைக்கப்படுவதற்குப் பதிலாக சனசமூக நிலையத்துடன் எஞ்சிய 11.45 பர்ச்சசும் மின்சார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | உள்ளனவா என்பதை உறுதி செய்தலும் நடைபெற வேண்டும். | குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

### 3.3 பயனற்ற செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாரச்சந்தையை நிர்மாணிப்பதற்கு 2011 ஆம் ஆண்டில் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 05 மில்லியனை கடனாகப் பெற்று அதில் ரூபா 7,807,501 செலவில் 03 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், புதிய வர்த்தகப் பல்கூட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு அக்கட்டிடம் தகர்க்கப்பட்டிருந்தது. தகர்க்கப்பட்ட கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தி சபையின் தேவையாக உள்ள வாகனத் தரிப்பிடமொன்றை தயாரிப்பது சபையின் நோக்கமாக இருந்தது. எவ்வாறாயினும், 2019 டிசம்பர் 31 ஆந் திகதியளவிலும் இப்பொருட்கள் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படாது திவிநெகும சந்தையின் ஒரு பகுதியில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் இக்கடனில் மேற்கொண்டும் ரூபா 1,788,828 கொடுப்பனவு | மூலதனச் செலவினம் முறையான திட்டத்தின்படி நடைபெற வேண்டும். | இச்செயற்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்துவதாகும். இது சம்பந்தமாக மேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. தகர்க்கப்பட்டபோது பெறப்பட்ட பொருட்கள் வாகனத் தரிப்பிட நிர்மாண வேலைக்குப் பயன்படுத்தப்பட்டு எஞ்சிய பொருட்கள் வேலை முடிவடையாத நிலையில் உள்ளன. |

செய்யப்படாதிருந்தது. இதனால் இச்செலவினம் பயனற்ற செலவினமாகியது.

### 3.4 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நடைமுறைச் சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட சபையின் 4 ஏக்கர் காணி நேரடியாகப் பரிசீலிப்பதற்கு கிடைக்காது உள்ளது. இதனுடன் அளவு தெரியாத சொத்தொன்றும் புலுகஹகும்புர பொறகொடவத்தையில் உள்ள 03 அத்துமீறல் குடியேற்றவாசிகளது வீடுகளும் சம்பந்தமாகத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நேரடியாகப் பரிசீலிப்பதற்கு இல்லாத சொத்துக்கள் சம்பந்தமாக பரிசோதனை மேற்கொள்வதுடன் மற்றும் அத்துமீறிய குடியேற்ற வாசிகளது வீடுகள் சம்பந்தமாக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டும். | 2020 பொருட் கணிப்பின் மூலம் திருத்தஞ் செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துமீறிய குடியேற்ற வாசிகள் உள்ள 03 வீடுகளை சுவீகரிப்பதற்கு சட்டபூரவ நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |